# பாரம்பரியம் மிகுந்த
# பரங்கிப்பேட்டை

**(வருணபுரி, முத்துகிருஷ்ணாபுரி, கிருஷ்ணபட்டினம், முஹம்மது பந்தர், போர்ட்டுநோவோ, பறங்கிப்பேட்டை)**


**முனைவர் மு. ஸ்ரீநிவாஸன்**
பேராசிரியர்
மின்னஞ்சல்: mahasrini1@gmail.com
கைபேசி: 94434 35455

&

**M.P. அருள்மூர்த்தி, A.C. ரத்தீஷ் மற்றும் R. வினோத்குமார்**
ஆராய்ச்சி மாணவர்கள்
கடல்வாழ் உயிரியல் உயராய்வு மையம்
கடல் அறிவியல் புலம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
பரங்கிப்பேட்டை - 608 502
தமிழ்நாடு

முதற்பதிப்பு : 2016

புத்தக வெளியீடு : பேராசிரியர் முனைவர் **மு. ஸ்ரீநிவாஸன்**
மற்றும் **ஆராய்ச்சி மாணவர்கள்**
கடல்வாழ் உயிரியல் உயராய்வு மையம்
கடல் அறிவியல் புலம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
பரங்கிப்பேட்டை - 608 502, தமிழ்நாடு

*தனி சுற்றுக்கு மட்டும்

அச்சிட்டோர் :

வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்

## சமர்ப்பணம்



எனது தகப்பனார்
திரு. அ. முத்துக்குமாரசாமி, B.A.B.L..
அரசு வழக்கறிஞர்



அருள்நிதி மரு கு. அம்பலவாணன்
சித்த மருத்துவர் & யோகா
பேராசிரியர்

## என்னுரை



ஒரு நாட்டைப் பற்றி, ஒரு ஊரைப் பற்றிய வரலாறு, ஒரு குடும்பத்தைப் பற்றிய சரித்திரம், தெரிந்து கொள்வது நல்லதொரு ஞானமாகும்.

தமிழ்நாட்டில், வரலாற்று சிறப்புமிக்க உள்ள இடங்கள் நிறைய உள்ளன. சிதம்பரம் அருகில் உள்ள ‘கடலோர கதை’ இந்த புத்தகம்.

எனது தாயார், எனது மாமனார் பிறந்து வளர்ந்த ஊர். 1982 ல் முதுநிலை (M.Sc.) பட்ட படிப்பு படிக்க வந்த முதல் 2016, பேராசிரியராக வளர்ந்து வந்ததும் இந்த ஊர்தான். 34 வருடங்கள் இந்த மண்ணில் மகத்தாக இருந்ததற்கு பல கடல் ஆராய்ச்சி புத்தகமும், கட்டுரையும் எழுதியிருந்தாலும், பரங்கிப்பேட்டைப்பற்றி வரலாறு எழுதுவது ஓர் சிறந்த பணியாகவும், ஆத்ம திருப்தியாகவும் கருதுகிறேன்.

ஆங்கிலத்தில் “Know about Portonovo” என்ற புத்தகம் வெளியிட்ட பிறகு கிடைத்த வரவேற்பை தொடர்ந்து இந்த சிறிய முயற்சி.

வாழ்த்துரை வழங்கிய அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் S. மணியன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. புலமுதல்வர் பேராசிரியர் கதிரேசன், பேராசிரியர்கள் L. கண்ணன், S. அஜ்மல்கான் அவர்கள் கொடுத்த ஊக்கத்திற்கு நன்றி. சேவாமந்திர் முதல்வர் அவர்களுக்கும், உக்காஷ் நிர்வாகிகள் மற்றும் பாபாஜி கோயில் நிர்வாகிகள் உதவியதற்கு நன்றிகள்.

மேலும் திருமதி லோ. விஜயலட்சுமி, எங்கள் மையத்திலுள்ள சுற்றுச்சூழல் தகவல் மையம் அவர்கள் தட்டச்சு செய்து புத்தக வடிவில் அமைத்ததற்கு நன்றி.

எனது துணைவியார் S. கீதா, மகன் S. ஜெயராம், மகள் S. பத்மஸ்ரீ, மருமகள் J. சித்ரா, குட்டிசெல்லம் ஜஸ்வந்த் என்கிற கிருஷ்ணாவிற்கு எனது அன்புகள்.

இந்த சிறிய புத்தகம் அமைய உதவிய அத்தனை அன்பர்களுக்கும் நன்றி. ஆலோசனைகள் வரவேற்க்கப்படுகின்றன.



01.07.2016

**(மு. ஸ்ரீநிவாஸன்)**



**ANNAMALAI UNIVERSITY**

(State University-Accredited with 'A' Grade by NAAC)

ANNAMALAINAGAR - 608 002, CHIDAMBARAM, TAMIL NADU, INDIA

**Prof. S. Manian,** M.Sc., Ph.D.,
Vice-Chancellor

## வாழ்த்துரை

17.5.2016

ஒவ்வொறு ஊருக்கும் அதன் சரித்திரம் மிகவும் அவசியம். இந்த சிறிய புத்தகம், பரங்கிப்பேட்டையைப்பற்றி பல தகவல்களை கொண்டுள்ளது. இந்த ஊரின் பாரம்பரியம் மற்றும் வரலாற்று சிறப்புக்களை எளிதாக புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அமைந்துள்ளது.

இந்த இடம் "போர்டுநோவோ" என்று அழைக்கப்பட்டது. முகலாய பேரரசின் ஆட்சியின் கீழ் இருந்தபோது இது "முகமது பந்தர்" என்றழைக்கப்பட்டது. கிருஷ்ணதேவராயர் ஆட்சி காலத்தில் இந்த ஊர் முத்துகிருஷ்ணபுரி என்றழைக்கப்பட்டது. மேலும் ஐரோப்பியர் வந்து குடியேறியவுடன் பறங்கியர் வாழும் பேட்டை என்று பொருள்பட "பரங்கிப்பேட்டை" என்ற பெயர் பரவிற்று. மேலும் இந்த இடம் "சிறிய சிங்கப்பூர்" என்றும் வழங்கப்படுகிறது.

போர்டுநோவோ துறைமுகம் நீண்ட காலமாக வியாபார மையமாக திகழ்ந்துள்ளது. 6 வது நூற்றாண்டில் நாயக்கர்களும், 7வது நூற்றாண்டில் அரபு வணிகர்களும், 8 வது நூற்றாண்டில் இஸ்லாம் மதத்தவர்களும் இவ்வூரில் வாழ்ந்ததாக கருதப்படுகிறது. போர்த்துகீசியர்கள் கி.பி. 17 மற்றும் 18 ம் நூற்றாண்டிலும், பிரிட்டீஷ் மக்கள் 19 ம் நூற்றாண்டிலும் வாழ்ந்து வந்தனர்.

மேலும் பரங்கிப்பேட்டை நூற்றுக்கணக்கான தர்காக்களை கொண்ட ஊராக, பாபாஜி பிறந்த மண்ணாக, மைசூர் போர் நடந்த வரலாற்று இடமாக அறியப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, வெவ்வேறு மதங்களைப் பின்பற்றி வாழ்ந்து வந்தாலும் மக்கள் ஒற்றுமையுடனும், மத நல்லிணக்கத்துடனும், வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பரங்கிப்பேட்டையில் கடல்வாழ் உயிரின ஆராய்ச்சி மையம், 1957 -ல் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தால் நிறுவப்பட்டது. தற்போது 617 ஆய்வாளர்களுக்கு முனைவர் பட்டம் (Ph.D.) அளித்துள்ளது. கடல்வாழ் உயிரியல் உயராய்வு மையத்தில் பேராசிரியராக பணிபுரியும் முனைவர் ஸ்ரீநிவாஸன் மற்றும் அவரது ஆராய்ச்சி மாணவர்கள் ஒரு பயனுள்ள புத்தகத்தை முழு முயற்சி எடுத்து வெளியே கொண்டுவந்ததற்கு எனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(Dr. S. MANIAN)**

**K. Rajagopal, M.A., B.Ed.,**
**Headmaster**
**(Senior Citizen of Parangipettai)**



## வாழ்த்துரை

21.6.2016

1933 -ல் இவ்வூரில் பிறந்து, வளர்ந்து, படித்து பட்டம் பெற்று தலைமையாசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற, இந்த ஊரின் மூத்த குடிமகனாக எனக்கொரு ஏக்கம் இருந்தது. பரங்கிப்பேட்டை பாரம்பரியத்தை பற்றி தொகுத்து ஒரு நூலாக வெளிவந்தால் சிறப்பாக இருக்கும் என்று என்னியிருந்தேன்.

தற்போது பேராசிரியர், எனது மருமகன் மு. ஸ்ரீநிவாஸன் அவர்களும், ஆராய்ச்சி மாணவர்களும் எடுத்துக்கொண்ட முயற்சி இன்று அழகிய சிறிய புத்தகமாக உங்கள் கையில் மலர்ந்துள்ளது.

இந்த ஊரிலிருந்து சிங்கப்பூர், மலேசியா மற்றும் அரபு நாடுகளுக்கு பலபேர் வேலை செய்து பொருள் ஈட்டி இங்கு திரும்பிவந்து சிறப்பாக வாழ்கிறார்கள்.

இந்த புத்தகம் வெளிவர உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது வாழ்த்துக்கள்.



**(K. RAJAGOPAL)**

# பொருளடக்கம்


| | | வரிசை எண் |
|---|---|---|
| 1. | பெயரும் பெருமையும் | 1 |
| 2. | வரலாறு | 4 |
| 3. | வரலாற்றுச் சின்னங்கள் | 7 |
| 4. | சேவாமந்திர் | 8 |
| 5. | கடல்வாழ் உயிரியல் ஆராய்ச்சி மையம் | 9 |
| 6. | பாபாஜி | 12 |
| 7. | இரும்பு தொழிற்சாலை | 16 |
| 8. | மேற்கோள் நூல்கள் | 23 |

## பெயரும் பெருமையும்

மனிதனுடைய நாகரிகம் வளர்ந்தது. நீர் நிலைகளை ஒட்டியே இருந்து வந்தது. கங்கை, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி, நயில்நதி போன்ற ஆறுகளை ஒட்டி மனித இனம், விவசாயம், கால்நடை வளர்ப்பு போன்று வாழ்வதற்கு வழிவகுத்தது.

உப்புநீர் உள்ள கழிமுகங்கள், கடல் அருகில் உள்ள முகத்துவாரம் போன்ற இடங்களில் படகு, சிறிய கப்பல் மூலம் நீர் வழி போக்குவரத்து தொடங்கி அருகில் உள்ள நாடுகளுக்கு சென்று வந்தான். மனிதனின் தேடல்கள் தொடர்ந்தன.

ஏன் இந்த பரங்கிப்பேட்டைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சிறப்பு இருந்தது என்ற கேள்வி எழும். சென்னை செல்வதற்கே ECR சாலை உள்ளதா? நாம் வேறு சாலை எளிதா என்று பார்ப்போம். அதுபோல அக்காலத்தில் சாலை, இரயில் வசதி இல்லாததால் படகு மூலம் வந்து போவதற்கு வெள்ளாறு ஒரு சிறந்த நீர் வழியாக அமைந்தது. மேலும் பாய்மர கப்பல்களுக்கு காற்றோட்டமும், நீரோட்டமும் சிறப்பாக அமைந்தது இந்த இடம். அதனால்தான் சோழராஜா தனது கப்பல்படையை பிச்சாவரம், பரங்கிப்பேட்டையில் வைத்து இருந்தார். அதைக்கொண்டு போரும் புரிந்தார். வாணிபமும் செய்தார் என்று வரலாற்று குறிப்புகள் கூறுகின்றன.

கிருஷ்ணதேவராயர் இவ்விடத்திற்கு வந்து மக்கள் வாழ்வதற்கு வீடு கட்ட இடமும், விவசாயம் செய்ய நிலமும் கொடுத்து “கிருஷ்ணபட்டினம்” என்று பெயரிட்டு வாணிபம், விவசாயம், மீன்பிடிப்புகளில் சிறந்து விளங்கி

பொன் விளையும் பூமியாக மாற்றி அமைத்தார். இதை அறிந்த முகமதியர்கள் அரபு நாட்டிலிருந்து வந்து வியாபாரம் செய்து மரைக்காயர் இனத்தினர் இங்கேயே திருமணம் செய்து வாழ்ந்தனர். மேலும் அரபு நாடுகளிலிருந்து இங்கே குடியேறினர். பல மசூதிகள் கட்டப்பட்டன. நாகூர், ஏர்வாடி போன்று தர்கா இங்கு அமைக்கப்பட்டது.

ஒரு இடத்தில் செல்வ வளம் கொழித்திருந்தால் மற்றவர்களுக்கு அதை எப்படி கொள்ளை அடிப்பது என்ற எண்ணம் வருகிறது. 1871 ஆம் ஆண்டு சர் ஐயர் கூட் என்ற ஆங்கில நாட்டு தளபதி 8000 போர் வீரர்களை கப்பலிலிருந்து இறக்கி ஹைதர்அலியுடன் 20000 வீரர்களை ஜீலை-1 அன்று தொடங்கப்பட்ட “மைசூர் போர்” என்பது சரித்திர பெயர் பெற்றது. இதன் கல்வெட்டு கடல்வாழ் உயிரியல் உயராய்வு மையத்தின் அருகில் இன்றும் உள்ளது. போரில் ஆங்கிலேயர்கள் வென்றனர். புது துறைமுகம் (Portonovo) உருவாகியது. போர்ச்சிக்கீசியர்கள், டச்சு, பிரன்சு நாட்டினர் இங்கு அடிக்கடி வந்து சென்றனர். இதன் சுவடுகள் இன்றும் உள்ளன (படம் 7).

ஸ்ரீஆண்டாள் பாடிய திருப்பாவையில் “வங்கக்கடல் கடைந்த மாதவனை, கேசவனை” போன்று இந்த அலைவீசும் வங்கக்கடல் கிழக்கே, காலமெல்லாம் வரலாற்றுச் சிந்துபாடும் வெள்ளாறு தெற்கே எல்லையாகக் கொண்டு வடக்கிலும் மேற்கிலும் 4 சதுர மைல் பரப்பளவில் அமைந்துள்ளது பரங்கிப்பேட்டை (பறங்கிப்பேட்டை). கடலூரை அடுத்து தென்னார்காடு மாவட்டத்தில் சிறப்புமிக்க துறைமுகமாக இருந்தது பரங்கிப்பேட்டை. அறவழி அரசியல் சிறப்பும், ஆன்ற

தொழில் சிறப்பும், வற்றாத வணிகச்சிறப்பும், வாழ்வாங்கு வாழ்ந்த புலவர்கள் சிறப்பும், தமிழ் இலக்கியச் சிறப்பும் உண்டு இவ்வூருக்கு.

இந்துக்களும், முஸ்லீம்களும் இணைந்து தேசிய ஒருமைப்பாட்டுச் சின்னமாக வாழ்கின்றனர் இங்கு. "திரை கடல் ஓடியும் திரவியம் தேடு" என்பதற்கு ஏற்ப கடல் கடந்து வாணிபத்தில் ஈடுபட்டுள்ளனர் இங்குள்ள மக்கள். பலர் கடல் ஓடி (Seaman) களாகவும் பணியாற்றுகின்றனர். படகோட்டுதலும், மீன் பிடித்தலும் பண்டு தொட்டு இங்குள்ள மக்களை வாழ்விக்கும் தொழில்கள்.

7 -ம் நூற்றாண்டிலேயே இஸ்லாம் மதம் இவ்வூரில் பரவியதாகக் கருதப்படுகிறது. 11 மசூதிகளும், 360 தர்க்காக்களும் இருக்கின்ற காரணத்தால் பரங்கிப்பேட்டைக்கு "இரண்டாவது பாக்தாத்" என்ற பெயரும் உண்டு. மிகச் சிறப்பாக இயங்கி வரும் மசூதிகள் மீராப்பள்ளி, புதுப்பள்ளி ஆகும். மீராப்பள்ளியில் முஸ்லீம்கள் வெள்ளிக்கிழமை தோரும் தொழுகை நடத்தும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் அரபு நாட்டில் தோன்றிய ஞானஒளி நபிகள் நாயகம் அவர்களின் அன்பொழுகும் திருவதனத்தாலும், அறம் காட்டும் திருநெறியாலும் ஈர்க்கப்பட்ட மகான்கள் பலர் இஸலாமிய பிரச்சாரம் செய்ய பறங்கிப்பேட்டைக்கு வந்தனர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று கருதி சிலர் இங்கேயே தங்கிவிட்டனர். இவ்வாறு தங்கி சமாதி பெற்றவர்களுள் முகம்மது நபிகளின் நெருங்கிய தோழர்களான "உக்காசு சகாபி", "அல்குறைஷ" இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள். உக்காசு சகாபி அடங்கப்பெற்ற இடம் மன்மூடி மேடாக

இருந்தது. தொழிற்சாலை அமைக்க தோண்டிய பொழுது தர்க்கா இருந்ததைக் கண்டுபிடித்தனர். அதனால் இது **கண்டெடுத்த சாபு தர்க்கா** என இப்பொழுது வழங்கிவருகிறது. அல்குரைஷ் என்னும் அடியாரின் பெயர் அரைக்காசு நாச்சியார் என மருவி இருக்கிறது. அரைக்காசு நாச்சியார் தர்க்கா மீராப்பள்ளியின் தென்கிழக்கு மூலையில் இடம் பெற்றுள்ளது. இவரை ஆண் என்பாரும் பெண் என்பாரும் உண்டு.

பரங்கிப்பேட்டையில், அருள்மிகு முத்துக்குமாரசாமி கோயில், ஆதி மூலேஸ்வரர் கோயில், விசுவநாத கோயில் என்ற செட்டிக்கோயில் (சிவன்), ஆதிபராசக்தி கோயில், கற்பக விநாயகர் கோயில், வேட்டவல மாரியம்மன் கோயில் முதலியன புகழ்பெற்றவை. அருள்மிகு முத்துக்குமார சுவாமி திருக்கோயிலில் வாரவழிபாட்டு மன்றத்தினர் வெள்ளிக்கிழமை தோறும் வழிபாடு நடத்துகின்றனர்.

### பெயர்கள் வந்த வரலாறு

செஞ்சி, கிருஷ்ணப்ப நாயக்கன் இவ்வூருக்கு கிருஷ்ணப்பட்டினம் என்று தம் பெயரை இட்டார். முஸ்லீம்களின் ஆட்சியில் கிருஷ்ணப்பட்டினம் முகம்மது பந்தர் என்றாயிற்று. முகம்மதுபந்தர் ஐரோப்பிய நாட்டினருக்கு சந்தையாக ஆனதால் ஐரேப்பியர் வந்து குடியேறியவுடன் பறங்கியர் வாழும் பேட்டை என்ற பொருள்பட பறங்கிப்பேட்டை என்ற பெயர் பரவிற்று. பிராங்காய்ஸ் என்ன பிரஞ்சு சொல்லிலிருந்து ஏற்பட்ட **பிராங்க்ஸ்** எனப்படும் ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கமே **பறங்கி** எனப்படும். போர்துக்கிசியர் குடியேறிய செயின்ட் தாமஸ் மவுன்ட், பிரஞ்சுக்காரர் குடியேறிய பிராங்க்காய்ஸ்

பேட்டை என்ற இடங்கள் இரண்டுமே **பறங்கிமலை, பறங்கிப்பேட்டை** என்று வழங்கிற்று. இவ்விரண்டு பெயர்களிளும் பறங்கி என்ற பொதுச்சொல் வந்து இருக்கின்றது. **பறங்கி** என்ற சொல் **ஐரோப்பிய நாட்டினர் அனைவரையும் குறிக்கப் பயன்பட்டது**. பிரஞ்சுக்காரர்கள் செலாவன் செய்த நாணயம் "பறங்கிவராகன்" என பறங்கிப்பேட்டையில் புழக்கத்தில் இருந்தது.

16 -ம் நூற்றாண்டில் போர்த்துக்கீசியர் இங்கே குடியேறி ஆட்சி புரிந்த பொழுது அவர்கள் ஒரு புதிய துறைமுகம் அமைத்தனர். அப்பொருளில் "போர்ட்டு நோவோ" என்ற பெயரை இட்டனர். **"நிறு ஓபர்ட்டோ"** என்ற **போர்த்துக்கீசயச்** சொல்லே **போர்ட்டுநோவோ** என மருவி இன்றளவும் வழங்கி வருகிறது.

**புலவர்கள் குறிப்பு**

பரங்கிப்பேட்டையை வருணபுரி, முத்துக்கிருஷ்ணபுரி என்றும் கூறுவர். இத்தலத்தை வடமொழியில் பிரம்மத்தலும், தென்மொழியில் பூதன்நாகன், தில்லைவிடங்கன் மாரிமுக்துப்பிள்ளை, குன்றத்தூர் அட்டாவதானி சொக்கப்ப நாவலர், மாதுரம் சாமிநாத கவிராயர், தருமை யாதீன மகா வித்துவான் முத்துத்தாண்டவராயப்பிள்ளை ஆகியோர் பாடியுள்ளனர். வருணபகவான் இங்கு எழுந்தருளியுள்ள ஆதி மூலேஸ்வரரை வழிபட்டு வந்தமையால் "வருணாபுரி" எனப்பெயர் வந்தது என்று தலப்புராணம் கூறுகிறது (சீனிவாசன், 1998, தமிழ் ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி).

## அரசியல் வரலாறு

பொன்விளையும் பூமியாகக் கருதப்பட்ட கர்நாடக இராஜியத்தின் கிழக்கு கடற்கரைப் பட்டினங்களுள் பறங்கிப்பேட்டையும் ஒன்று. இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கன் செஞ்சியை ஆண்டபொழுது அவனது ஆட்சிக்குள் இப்பகுதியும் அடங்கி இருந்தது. 1597-98 ஆம் ஆண்டுகளில் “பிமன்டோ” என்ற போர்த்துக்கீசியப் பாதிரியார் இவ்வூருக்கு வருகைபுரிந்து கிருஷ்ணப்ப நாயக்கருடைய திருவேலக்க காட்சியையும் கண்டு களித்திருக்கின்றார்.

இவ்வூர் **மாவட்டத் “தலைநகரமாகவும்”** இருந்தது. இந்த ஊரில் இருந்த **பார்கான்** என்ற **கவர்னரின்** பெயரில் பார்க்கான் முடுக்கு என்ற சந்து இன்றையளவும் இருந்து வருகின்றது. இவரது கல்லறை பக்கர்மாலிமார் தர்க்காவுக்கு அருகில் இன்றும் பழம்பெருமை பேச நிற்கின்றது. சிவாஜியின் தந்தை ஷாஜி 1661 -ல் இவ்வூரைக் கைப்பற்றினார். பறங்கிப்பேட்டை சிவாஜியின் ஆளுகைக்குட்பட்டபோது 8000 கொள்ளையர்களால் சூரையாடப்பட்டது. அவர்கள் கொள்ளையடித்து பாழ்படுத்திய மூன்று முக்கிய ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் துறைமுகங்களுள் பறங்கிப்பேட்டையும் ஒன்று.

1643 -ல் இவ்வூருக்கு டச்சுக்காரர்கள் வந்து 1825 -வரை செல்வாக்குடன் இருந்தனர். **16 -ம் நூற்றாண்டு முதல் தங்கவயலாக இருந்த பறங்கிப்பேட்டைக்கு போத்துக்கீசியர், டேனிஷ்காரர், ஆங்கிலேயர் ஆகியோர் வந்தவண்ணமாய் இருந்தனர்.** 1676 செப்ட்மபர் 14 -ல் ஷெர்கான் லோடி என்பவரால் பரங்கிப்பேட்டை கைப்பற்றப்பட்டது. 1776 நவம்பர் 4 -ல் நஷிர் முகம்மது

என்பவர் பறங்கிப்பேட்டை வழுதாவூர் முதலிய நகரங்களை ஷெர்கான் லோடிக்கு கொடுத்து சமாதானம் செய்து கொண்டான். 1678 -ல் மராட்டியர்களால் நியமிக்கப்பட்ட உறவில்தார் ஒருவன் டச்சுக் கப்பலொன்றை சுங்கவரி கொடுக்காததற்காக பரங்கிப்பேட்டை துறைமுகத்தில் தடுத்து நிறுத்திவிட்டான்.

பரங்கிப்பேட்டையில் தொழிற்சாலைகள் நிறுவுவதல் டச்சுக்காரர்களுக்கும் போத்ததுக்கீசியர்களுக்கும் போட்டி ஏற்பட்டது. 1681 முதல் 1785 வரை ஐரோப்பிய அரசுகளிடையே சிறு போர்கள் நடந்துகொண்டே இருந்தன.

**நாட்டுப்புறப்பாடல்**

“காடடா பிச்சாவரம்
கருங்கானகம்டா ராதாவிளாகம் (கிள்ளை)
மேடடா பொன்னந்திட்டு
மோட்சம் செஞ்ச பரங்கிப்பேட்டை”

என்பதை ‘மோசம் செஞ்ச பரங்கிப்பேட்டை’ என்று தவறாக கூறுகின்றனர். இங்கு பல மகான்கள் அடக்கஸ்தலம் உள்ளதால் மோட்சம் என்பதே சரி.

**வரலாற்றுச் சின்னங்கள் (இன்றும் பார்க்கலாம்)**

ஹாலந்தர் தோட்டம் என்னும் புதையிடம், சிதைந்த மாதாக் கோயில், கிழக்கிந்திய கம்பெனியில் வேலை பார்த்தவர்களின் புதையிடம், 1781 -ல் போர் நடைபெற்ற களத்தில் அதைக் குறிக்கும் கல்வெட்டு, படகு பாலத்துக்கருகே எஃகுத் தொழிற்சாலையின் சிதைந்த பகுதி, ராயல் தெரு, பண்டகசாலைத் தெரு, ராலித்தோட்டம், வெள்ளைக்காரன் கிணறு, அகரம் எல்லையிலுள்ள பேட்டைக் கோயில், குளம் அனைத்தும்

பறங்கிப்பேட்டையின் பழம் பெருமையைப் பேசுகின்றன. இப்பொழுது வன்னியர் பாளையமாக உள்ள இடம் ஒரு காலத்தில் மன்னர்புரி வீதியாக இருந்தது என்பது ஆராய்ச்சிக்குரியதே. பாரி கம்பெனிளைத் தொடங்கிய தாமஸ் பாரி, 1824 -ல் இவ்வூரில்தான் உயிர் நீத்தார்.

**சேவாமந்திர்**

100 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய புகழ்பெற்ற கல்வி நிறுவனம் சேவாமந்திர், பெண்கள் மேம்பாட்டிற்காக தொடங்கப்பட்டது. இந்தியாவின் தந்தையான காந்திஜி தென்னிந்தியாவில் உள்ள சேவாமந்திர் என்ற கல்வி நிறுவனத்தை அடிக்கல் நாட்டுவதற்கு உதவினார். சேவாமந்திர் நிறுவனம் முன்பு "கிருஸ்துவ தேசிய பெண்கள் கல்வி நிலையமாக இருந்தது." சேவாமந்திர் என்ற பெயர் கோவில் மூலம் சேவை நடக்கிறது என்பதை குறிக்கிறது. இது ஒரு முக்கியமான அம்சமாகும். ஆங்கிலேயருடைய கொடுமையான ஆதிக்கத்தின்போது நம் நாட்டிற்கு இந்த கல்விநிறுவனத்தின் சேவை தனித்தன்மையானதாக இருந்தது. ஏனென்றால் இந்த கல்வி நிறுவனம் பின்னல் ஆடை மற்றும் கைவினை பற்றிய கல்வியை 1922 லிருந்தே அறிமுகம் செய்தது. இவை காந்தியின் நெசவு தொழில் கல்வி அறிமுகம் ஆவதற்கு என்றே இந்த தொழிற்கல்வி படிப்பு இந்த நிறுவனம் அறிமுகம் செய்தது.

**அன்னிமேரி பீட்டர்சன்**

அன்னிமேரி பீட்டர்சன் அவர்கள் டேனிஸ் பெண் மக்களால் பெரியம்மா என பிரியமாக அழைக்கப்பட்டார். அவரி 1878 -ல் பிறந்தார். 1921 -ம் ஆண்டு சேவாமந்திர்

என்ற கல்வி நிறுவனத்தை நிறுவினார். இந்நிறுவனத்தை அவர் உறுவாக்கியபொழுது அவருக்கு வயது 33. பெரிய அம்மாவின் ஆங்கில அர்த்தம் “Mother of great love”. அவர் 1951 -ல் மறைந்தார். அவரது சமாதியை இன்றும் காணலாம்.

**மேரி சாக்கோ**

சின்னம்மா என அன்போடு அழைக்கப்பட்ட மேரி சாக்கோ, கேரள மண்ணிலிருந்து இங்கு சேவை செய்ய வந்தார்கள். பல ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றி இந்த கல்வி நிறுவனத்தை கோயிலாக மாற்றினார்.

சேவாமந்திர்க்கு பல முக்கியமாக தலைவர்கள் வந்துள்ளனர். மகாத்மா காந்தி, கர்மவீரர் காமராஜர் (முன்னால் முதலமைச்சர், தமிழ் நாடு), தமிழ்நாட்டின் கவர்னர்கள் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரிகள் ஆகியோர் இங்கு வருகை புரிந்துள்ளனர். தற்போது சேவாமந்திர் மூத்த ஆசிரியர்களின் ஆசியுடன் நன்றாக நடக்கிறது. 1500 -க்கு மேற்பட்ட மாணவிகள் படிக்கின்றனர். 100 -க்கு மேற்பட்ட மாணவிகளுக்கு ஆசிரியர் பயிற்சி கல்லூரி நடைபெறுகிறது. இங்குள்ள பழைமையான, அழகான மரங்களும் மனதை அமைதியடைய செய்கிறது. மேலும் மகாத்மா காந்தியின் காலணியை கண்ணாடி பேழையில் இன்றும் தரிசிக்கலாம் (படம் 8).

**கடல்வாழ் உயிரியல் உயராய்வு மையம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பரங்கிப்பேட்டை**

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கடல்வாழ் உயிரியல் உயராய்வு மையத்தை முதன் முதலில்

பரங்கிப்பேட்டையில் தொடங்கப்பட்டது. இந்த வளாகத்திற்கு அருகில் வெள்ளாறு உள்ளது. இந்த வெள்ளாற்றில் சதுப்புநிலக்காடு காணப்படுகிறது. இந்த ஆற்றில் உவர்நீர் மற்றும் கடல்நீர் கலந்து காணப்படுகிறது. இந்த இடத்திலிருந்து 17 கி.மீ. தூரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உள்ளது. கடல்வாழ் உயிரியல் உயராய்வு மையத்தை அறிவியல் பேராசிரியர் **R.V. சேஷய்யா அவர்கள் 1957** -ல் விலங்கியல் துறை உதவியால் நிறுவினார். பின்னர் இவை விலங்கியல் துறைகளின் பிரிவாக உயிரியல் ஆய்வக இடமாக அண்ணாமலைப் பல்கலைகழகத்தில் இருந்தது. பின்னர் இவை விலங்கியல் துறையிலிருந்து 1961 ஆம் ஆண்டு தனி பிரிவாக பிரிக்கப்பட்டது. அக்டோபர் 1963 -ல் இவை சிறப்பான ஆய்வக செயல்பாட்டால் கடல்வாழ் உயிரியல் உயராய்வு மையம் (Centre of Advanced Study in Marine Biology) என்று அங்கீகரிக்கப்பட்டது. இந்த ஆய்வகத்தின் முதல் ஆய்வுக்கூட கட்டிடத்தை UGC யின் முதல் தலைவரான Dr. C.D. தேஸ்முக் திறந்து வைத்தார்கள் பரிந்துரையின்படி கட்டப்பட்டது. இந்த மையம் 150 -க்கு மேலாக ஆய்வு திட்ட (Research project) அறிக்கைகளை முடித்திருக்கிறது. இந்த ஆய்வுக்கு தேவையான நிதியை பல தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களும் உதவியிருக்கிறது. இன்றளவும் உதவி செய்து கொண்டிருக்கிறது.

இம்மையத்தில் உள்ள விசாலமான நூலகத்தில் கிட்டத்தட்ட 7000 தேசிய மற்றும் சர்வதேச புத்தகங்கள் உள்ளது. மத்திய சுற்றுச்சூழல் தகவல் மையம் (ENVIS Centre) என்கிற தகவல் தரும் நிலையம் சிறப்பாக செயல்படுகிறது (படம் 9).

மேலும், ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான மக்களும், மாணவர்களும் அருங்காட்சியகத்தை பார்வையிட வருகைபுரிகின்றனர். கடல் குதிரை, கடல் பாம்பு, கடல் வெள்ளரி, பறக்கும் கோலா, முத்து சிப்பி, அல்லா மீன், கொடுவா மீன், பாறை மீன் என பட்டியல் நீண்டு கொண்டே செல்லக்கூடிய 60 ஆண்டு காலம் உழைப்பின் உதாரணமாக உள்ளது.

இம்மையத்தில் M.Sc. முதுகலை படிப்புகள் Marine Biology and Oceanography, Coastal Aquacutlure, Marine Biotechnology, Ocean Science Technology மற்றும் B.FSc. போன்ற படிப்புகள் உள்ளது. பல மாணவ, மாணவிகள் சேர்ந்து, வேலைவாய்ப்பு பெற்று பயன் அடைகின்றனர்.

இம்மையத்தில், 617 -க்கு மேற்பட்டவர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. கடல்பாசி வளர்ப்பு, மீன், நண்டு, இறால் வளர்ப்பு, வண்ண மீன் வளர்ப்பு பற்றி பாமரமக்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் சதுப்புநில மரங்கள் (Mangroves) வளர்ப்பதிலும், கடலோர தாவரங்கள், மணல் குன்றுகள், தாவரம் (Sand dune vegetation) பாதுகாப்பதிலும் ஆராய்ச்சி செய்துள்ளது. இந்த மையத்தைப்பற்றி தனியாகவே ஒரு புத்தகம் எழுதலாம்.

சிறிய ஊரில் கடலோரத்தில் உள்ள இந்த மையத்தில் படித்தவர்கள் உலகில் எங்கு பணியாற்றினாலும் இங்கு திரும்பி வரும்போது கூறும் வார்த்தை **“எனது தாய் வீட்டுக்கு” வருவது போல் உணர்கிறோம்** என்று உணர்ச்சி வசப்பட்டு கூறுவார்கள். அதுதான் இந்த மண்ணின் பெருமை.

## மகா அவதார் சித்தர் பாபாஜி

வடலூரில் வள்ளலார் இராமலிங்கரும், புவனகிரியில், ஸ்ரீராகவேந்தரரும், சிதம்பரத்தில் திருமூலரரும், சீர்காழியில் திருஞானசம்பந்தரரும், கடலூரில் திருநாவுக்கரசரும், பரங்கிப்பேட்டையில் பாபாஜியும் அவதரித்து தென்இந்தியாவை சிறப்படைய செய்தார்கள்.

பாபாஜி, சிதம்பரத்தின் வடக்கே உள்ள பரங்கிப்பேட்டை என்ற ஊரில் கி.பி. 203 -ம் ஆண்டு கார்த்திகை மாதம் ரோகினி நட்சத்திரத்தில் சுவேதநாத அய்யருக்கும் ஞானம்பிகைக்கும் எட்டாவது மகனாக பிறந்தார். இவருக்கு பெற்றோர் வைத்த பெயர் நாகராஜர்.

பரங்கிப்பேட்டையில் தற்போது சுங்க அலுவலகம் உள்ள இடத்தின் அருகில் பாபாஜி பிறந்தார். பாபாஜி தன்னுடைய பிறந்த இடம் வாழ்க்கை விபரம் பற்றி யோக முறையில் அவருடைய நேரடி சீடரான யோகி எஸ்.ஏ.ஏ. ராமையாவுக்கு தெரிவித்துள்ளார்.

யோகி ராமையா அவர்கள் 1975 ஆம் ஆண்டு பாபாஜி அவர்கள் பிறந்த இடத்தில் கோயில் கட்டியுள்ளார்.

பாபாஜி பரங்கிப்பேட்டையில் உள்ள முத்துகுமாரசுவாமி கோயிலில் விளையாடியவர். இவர் சிறு வயதில் பரங்கிப்பேட்டையிலிருந்து அடிமையாக விற்பதற்காக டாக்காவிற்கு கடத்தப்பட்டார். அங்கிருந்து ஒரு வேத விற்பன்னரால் பாபாஜி மீட்கப்பட்டு காசிக்கு அழைத்து செல்லப்பட்டார். இவர் வேதங்கள் பல பயின்று வேத விற்பன்னரானார்.

பின்னர் காசியிலிருந்து தென் இலங்கையில் உள்ள கதிர்காமத்திற்கு பாபாஜி சென்று அங்கு தியானத்தில் இருந்தபோது தமிழ் பதினென் சித்தர்களில் ஒருவரான போகநாதர் தோன்றி அவருக்கு கிரியா தியான யோகத்தைப் பயிற்றுவித்தார்.

பின்னர் பாபாஜி தென்னகத்தில் உள்ள குற்றால மலைப்பகுதிக்கு சென்று மாமுனிவர் அகத்தியரால் குண்டலினி பிராணயாமம் உபதேசிக்கப்பட்டார். அங்கிருந்து அகத்தியர் பாபாஜியை பத்ரிநாத்திற்கு அப்பாலுள்ள மலைப்பகுதிக்கு அழைத்து சென்றார். பத்ரிநாத்தில் மரணத்தையும் வென்ற சொரூப சமாதி நிலையை பாபாஜி அடைந்தார். இவ்வாறு சொரூப சமாதி அடைந்த பாபாஜி **கிரியா யோகத்தை** உலகத்திற்கு வழங்கியுள்ளார்.

பாபாஜியின் **கிரியா யோகம்** ஐந்து யோக சாதனைக் கொண்டது. **ஆசனம், பிராணயாமம், தியானம், மந்திரம், பக்தி** ஆகியவைகளை உள்ளடக்கியது. நடிகர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களும், நடிகர் விஜய் தந்தை சந்திரசேகரும், உலகில் பல நாடுகளிலிருந்தும் இவருக்கு பக்தர்கள் உண்டு.

மேற்கண்ட கிரியா யோகத்தை பாபாஜி தன்னுடைய நேரடி சீடர் யோகி ராமையாவுக்கு இமாலயத்தில் குருகுலவாச முறைப்படி பல ஆண்டுகள் உபதேசம் செய்தார். பாபாஜி உத்தரவின்படி உலகத்தில் 54 நிலையங்களை அமைத்து இந்த கிரியா யோக பயிற்சியை யோகி ராமையா அவர்கள் பரப்பி உள்ளார் (படம் 2).

## பரங்கிப்பேட்டையில் மக்கள் தொகை (2011)

பரங்கிப்பேட்டையில் 18 தேர்தல் வார்டுகள் உள்ளன. நகர பஞ்சாயத்தில் மக்கள் தொகை மொத்தம் 25,541, அதில் ஆண்கள் 12,808 பேர் உள்ளனர்.

0-6 வயதிற்க்குள்ள குழந்தைகளின் எண்ணிக்கை 3022 இது பரங்கிப்பேட்டையின் மக்கள் தொகையில் 11.83 சதவீதமாகும். படித்தவர்கள் 88.15 சதவீதம். மொத்த தமிழ்நாட்டில் 8-.09 சதவீதம் படித்தவர்கள் ஆவர். இது மாநில கல்வி அறிவைவிட பரங்கிப்பேட்டையில் கல்வி அறிவு உள்ளவர்கள் அதிகம். ஆண்களின் கல்வி 92.77 சதவீதம். பெண்களின் கல்வி 83.65 சதவீதம். இந்த நகரத்தில் 5561 வீடுகள் உள்ளன. பொதுமக்களுக்கான தண்ணீர் வசதி இங்கு கிடைக்கிறது.

## இஸ்லாமியர்கள்

பரங்கிப்பேட்டையில் ஏராளமான இஸ்லாமிய மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தனிப்பட்ட வம்சாவளியை சேர்ந்தவர்கள். தற்போது அவர்கள் தமிழ் மொழி தாய் மொழியாக இருந்தாலும் அவர்கள் அரபி மற்றும் உருது மொழிகளை பயன்படுத்துகின்றனர். தமிழ்நாட்டில் சோழர் ஆட்சிகாலத்தில் அரபு வணிகர்கள் பெரிதும் பரங்கிப்பேட்டையை உள்ளடக்கிய கோரமண்டல் கடற்கரையை சுற்றி வர்த்தகம் செய்தனர். ஹைதராபாத்திலிருந்து முஸ்லீம்கள் முகலாயப் பேரரசின் கீழ் இந்திய முஸலீம் ஆட்சியின்போது பரங்கிப்பேட்டையில் குடியேற தொடங்கினர். இதனால் பரங்கிப்பேட்டை இஸ்லாமிய கலாச்சார உருது போன்றவை தாக்கம் ஏற்பட்டது.

## மசூதிகள்

பரங்கிப்பேட்டையை சுற்றி தற்போது 13 க்கு மேற்பட்ட மசூதிகள் உள்ளன. மீராப்பள்ளி, கும்மத் பள்ளி, வாத்தியாப்பள்ளி, அப்பாபள்ளி, அவுஸ்பள்ளி, கிலுர் நபி பள்ளி, ஹபிபிய்யா பள்ளி, நவாப் பள்ளிகள் போன்றவை காணப்படுகின்றது. தீர்க்கரசி வசிக்கு முஹம்மது உக்காஷ் கல்லறையும் உள்ளது (படம் 3).

## கோவில்கள்

பழமை வாய்ந்த இந்து மத கோவில்கள் இங்கு நிறைய உள்ளது. குமரக்கோவில் (முருகன்), பெரிய கோவில் (சிவன்), வரதராஜ கோவில் (பெருமாள்), கற்பகவினாயகர் கோவில் (பிள்ளையார்), சஞ்சீவிராயர் கோவில் (அனுமன்), அங்காள பரமேஷ்வரி கோவில் (ஆரியநாட்டு கிழக்கு தெரு), எல்லையம்மன் கோவில், ஓடகரை மாரியம்மன் கோவில், வேட்டவல மாரியம்மன் கோவில், பராசக்தி கோவில் இதுபோன்ற மாரியம்மன் கோவில்கள் (படம் 5) நிறைய காணப்படுகின்றது. வண்ணாரப்பாளையம் என்ற இடத்தில் பழமைவாய்ந்த **செட்டிக்கோவில் என்கிற சிவன் கோவில்** உள்ளது. இங்கு நாவராத்திரி விழா 1950-55 -ல் **திரு. K. பழனிவேல் செட்டியார் (கௌரவமுனிசீப்)** மற்றும் அவரது துணைவியார் K.P. தனபாக்கியம்மாள் சிறப்பாக நடத்தினார்கள். பெரிய பழமைவாய்ந்த கோவில்களும் வரலாற்று நிகழ்வுகளும் இங்கு சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. இதனால் இந்த ஊரை **திருவருனமணியம்** என்று அழைத்தனார் (படம் 5).

## இரும்பு தொழிற்சாலை

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு பரங்கிப்பேட்டையில் தரம் வாய்ந்த இரும்பு தொழிற்சாலை இயங்கி வந்தது. இதற்கு வேண்டிய தாதுபொருட்கள் சேலத்தில் உள்ள செல்வராயன் மலையில் வெட்டி எடுத்து பெரிய தோனியின் வெள்ளாற்றின் மூலம் எடுத்து வந்து இரும்பு தொழிற்சாலையை டச்சுக்காரர்கள் அமைத்தனர்.

தொழிற்சாலைக்கு, சவுக்கு மரங்களை பல ஏக்கர் வளர்த்து இரும்பு உருக்க கரியை பயன்படுத்தினர். இன்றும் கரிக்குப்பம் என்ற ஊர் உள்ளது. துரு பிடிக்காத இந்த இரும்பினால் மயிலாடுதுறை வரை இதை பயன்படுத்தினர். சென்னை எக்மோரில் இரயில் நிலையத்தில் உள்ள இரும்பு கூரையில் “MADE IN PORTONOVO” இன்றும் சாட்சியாக உள்ளது. பல வருடங்களுக்கு பிறகு நஷ்டத்தில் இயங்கியதால் இரும்பு ஆலை மூடப்பட்டது. தீபாவளி மலர் தினகரன் சிறப்பு கட்டுரையாக 2015 ல் வெளிவந்துள்ளது (படம் 6 & 21).

## பக்கிங்காம் கால்வாய்

பக்கிங்காம் கால்வாய்796 கி.மீ. (494.6 மைல்கள்) துாரம் நதிநீர் போக்குவரத்து கால்வாயாக அமைந்தது. தெற்கு இந்தியாவிலுள்ள கோரமண்டல் கடற்கரை ஆந்திரமாநிலத்திலுள்ள காக்கிநாடாவில் இருந்து தமிழ்நாட்டிலுள்ள கடலூர் மாவட்டம் வரை உள்ளது. இந்த பக்கிங்காம் கால்வாயில் உவர்நீர் உள்ளது. இவை பிரிட்டீஷ் காலகட்டத்தில் 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டில் ஒரு முக்கியமான நீர் வழியாக இருந்தது (படம் 13).

## மேலும் சில பாரம்பரிய செய்திகள்

1. **போர்டுநோவா பகோடா:** ஆற்காடு சக்திவாய்ந்த நவாப் அவருடைய காலகட்டத்தில் போர்டுநோவாவில் தங்க நாணயங்கள் **பகோடா** என்று வந்தது. அவர்கள் நாகபடம் (நாகப்பட்டினம்) பரிமாற்றத்தின்போது பின்னர் ஆங்கிலேயர் அதே வடிவமைப்பில் டச்சு நாணயங்கள் பரிமாற்றத்தில் பகோடா என்று உருவானது (படம் 20).

2. அரபு மொழிக் கல்லூரி ஒன்று இவ்வூரில் சில ஆண்டுகள் நடைபெற்றது. மாநிலப் பூப்பந்தாட்டப்போட்டி இங்கு ஆண்டுதோறும் நடைபெறுகிறது. பூப்பந்தாட்டத்தின் தந்தை என்று ஷேக்நைனா மரைக்காயர் அவர்களை எல்லோரும் பாராட்டுகின்றார்கள்.

3. பரங்கிப்பேட்டையில் “நாகப்பா நினைவு உடற்பயிற்சி கழகத்தை” தென்னாற்காடு மாவட்ட பளு தூக்குவோர் கழகத்தின் தலைவர் வழக்கறிஞர் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி மலை. சுப்பிரமணின் அவர்கள் தொடங்கி நடத்தி வருகிறார்கள். இங்கு சிலம்பம் மற்போர், குத்துச்சண்டை, பலுதூக்குதல் முதலியன கற்றுக் கொடுக்கப்படுகின்றன. பிரபல மருத்துவர் டாக்டர். N. ரங்கபாஷ்யம் தனது பள்ளி படிப்பை அரசு உயர்நிலைப்பள்ளியில் படித்தவர்.

4. 1750 ஆம் ஆண்டு ரங்கபிள்ளை மண்டபத்தில் **ஜவுளி சாய தொழிற்சாலை** நடைபெற்று வந்தது. தற்போது சேதமடைந்த வகையில் உள்ளது.

5. பல மூலிகை **ஆயுர்வேத தைலம்**, சூரணம், லேகியம் உற்பத்தி செய்து பல இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

6. கடலூர் மாவட்டத்தில் வளிமண்டலவியல் தரவு அதகபட்ச மழை அளவு இங்கு கணெக்கெடுப்பு கருவி உள்ளது.

7. தாமஸ் பாரி ஈத் (EID) பாரி நிறுவனம் நிறுவப்பட்டது. 1842 போது அவர் காலமானர்.

8. பரங்கிப்பேட்டை இந்து, முஸ்லீம்களுக்கு ஒரு முக்கியமான புனிதமான இடமாக உள்ளது. மேலும் சகோதர உணர்வோடு பல ஆண்டுகளாக சிறப்பாக வாழ்ந்து வருகிறார்கள்.

**சீறாப்புராணம்**

முஹம்மது நபி அவர்களின் வரலாறு தமிழ் பாடலாக **உமறுபுலவர்** அவர்களால் எழுதப்பட்டது. அதைதான் இங்கு கூறப்பட்டுள்ளது. இந்த பாடல்ளை கொண்ட புத்தகங்கள் தான் சீறாப்புராணம் என்று பெயரிடப்பட்டது. அவர் ஒரு தமிழ்நாட்டை சேர்ந்த தமிழ் முஸ்லிம் புலவர். உமறுபுலவர் 1642 ஆம் ஆண்டு துாத்துக்குடி மாவட்டத்தை சார்ந்த எட்டயபுரத்தில் பிறந்தார். அவர் இந்திய நாட்டில் சிறந்த புலவர்களில் ஒருவராக போற்றப்பட்டார். சீறாப்புராணம் அவர்களின் சிறந்த பணிகளில் நபிமுஹம்மதுவின் வரலாறில் ஒன்றாக கருதப்படுகிறது. 5027 பாடல்கள் மூன்று காண்டங்களாக உள்ளது. அவை வல்லினத்து காண்டம், நுபுவத்து காண்டம், ஹிஜரத் காண்டம் ஆகும். ஒவ்வொரு காண்டமும் நபியின் வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டங்களையும் எடுத்துரைக்கிறது. அவர்களின் இலக்கிய பணிகளை முத்துமொழி மிலை மற்றும் சீதைகாதி திருமண பாடல் ஆகியவை ஆகும். இங்குள்ள **மீராப்பள்ளியில் முதலில் வெளியிடப்பட்டது** (படம் 19).

**சாலிகண்டு சாஹிப் தர்கா - தைக்கால்**

இந்த சிறிய நகரம் பல மகான் அடக்கஸ்தலம் சுற்றி காணப்படுகிறது. இந்த கல்லறை புதுசத்திரம் பரங்கிப்பேட்டை இடையே தைக்கால் எனும் இடத்தில் உள்ளது. நம்பியவருக்கு பல நோய்கள் தீர்க்கும் புனிதஸ்தலமாக உள்ளது (படம் 3).

**உக்காஷ்**

போர்ச்சுகீசியர்கள் இரும்பு தொழிற்சாலை அமைக்கும்போது இநத உக்காஷ் கல்லறை கண்டறியப்பட்டது. முன்பு மணற்குன்றுகள் தோண்டும்போது 15 அடி ஆழத்தில் கல்லறை ஒன்று காணப்பட்டது. அந்த கல்லறை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இறந்த உக்காஷ் கல்லறை என கண்டறியப்பட்டது. இது தொடர்பான ஆதாரங்கள் உருது கல்லூரியிலிருந்தும், பாகிஸ்தான் அரபு புத்தகங்களிலிருந்தும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் உள்ள நூலகத்திலிருந்து இவை சேகரிக்கப்பட்டன.

மேலே உள்ள ஆதாரங்களின் அடிப்படையில் மெக்காவில் இருந்து வந்த நபிகள் நாயகத்தின் 300 சீடர்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் சென்றனர். அதில் இருவர் இந்தியாவிற்கு வந்தனர். சென்னையில் உள்ள கோவலத்திலும், மற்றொருவர் பரங்கிப்பேட்டையிலும் மகாசமாதியாக உள்ளதாக குறிப்பிடுகிறது.

பரங்கிப்பேட்டைக்கு வந்தவர் நபிகள் நாயகத்திற்கு சீடர் மட்டுமல்ல அவருடைய தோழரும் ஆவார். அவர்தான் உலக புகழ்பெற்ற **உக்காஷ் ரலி ரலியல்லாடு அன்டு** ஆவார் தமிழ், அரபி, ஆங்கிலம் ஆகிய மூன்று

மொழிகளிலும் அறிஞர் ஆவார். இவர் அல்லாவின் அருள் பெற்றவர். இவர் நோய்களை குணப்படுத்தி அமைதியான வாழ்க்கைக்கு வழி வகுத்தவர். இங்கு கந்தூரி எனும் விழா வருடம் தோரும் ஜீலை மாதம் அனைத்து தரப்பு மக்களாலும் கொண்டாடப்படுகிறது. இந்தியாவிலுள்ள நிறைய சுற்றுலா பயணிகள் இந்த தர்காவிற்கு வருகை தருகின்றனர் (படம் 3).

**அருமையான அல்வா**

உணவு எல்லோருக்கும் வாழ்க்கையில் மிக முக்கிய ஒன்றாகும். கேட்டரிங் தொழில்நுட்பம் மற்றும் உணவு தொழில்நுட்பம் படிப்புகள் சிறந்த பகுதியாக உலகம் முழுவதும் உள்ளன. திருநெல்வேலி அல்வா பிரபலமானது போல மற்றும் மனப்பாறை முறுக்கு பிரபலமானது. பரங்கிப்பேட்டைக்கு அல்வா, பரோட்டா, மீன் வறுவல் மற்றும் கோழி குருமாவுக்கு பிரபலமானது.

அல்வாவில் குளுக்கோந்து (தேன், ரோஜா இதழ்கள்) கோதுமை பால், சர்க்கரை, நெய் போன்றவை சேர்த்து அல்வா உருவாக்கப்படுகிறது. அது ஒரு மாதம் வரை கெடாமல் இருக்கும் அல்வாவின் விலை ரூபாய் 280/கிலோ. சுற்றுலா பயணிகளும், பொதுமக்களும் அல்வாவை விரும்பி வாங்குவார்கள் (படம் 17).

**மீன் மற்றும் இறால் வளர்ப்பு**

1990 - ஆம் ஆண்டு இறால் வளர்ப்பு தென் இந்தியாவில் தொடங்கியது. தமிழ்நாட்டில் கடலோரத்தில் மீன்வளர்ப்பு பண்ணைகள் உள்ளது. பரங்கிப்பேட்டையில் வெள்ளாறின் அருகே 25 மீன் வளர்ப்பு குட்டைகள்/ பண்ணைகள் உள்ளது. அக்குவா கோல்டு என்றும்

‘டாலர்ஸ்’ என்றும் கூறுவர். இறால் வளர்ப்பு மற்றும் புலி இறால் போன்றவை இங்கு சிறப்பாக வளர்க்கப்படுகிறது. 1993 ஆம் ஆண்டு ‘வெள்ளை புள்ளி’ நோய் ஏற்பட்டதால் இறால் வளர்ப்பு அப்போது குறைந்துள்ளது. பத்து இறால் பண்ணைகள் உள்ளது. “வெனாமி” என்ற வெள்ளை இறால் வளர்க்கின்றன. சுமார் 200 டன் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கின்றனர். தமிழ்நாடு மாநில மீன் வளத்துறை, மீன்வளர்ப்போருக்கு நவீன குளங்கள் அமைத்து தமிழ்நாட்டில் உள்ள மீன்வளப்பில் ஆர்வம் உள்ளவர்களுக்கு பயிற்சி அளிக்கிறது (படம் 16).

**மீன்வளம்**

தேசிய கடல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மாநில மீன்வளத்துறையின் அறிக்கையின்படி தமிழ்நாட்டில் கிடைக்கக்கூடிய மீனகளில் பரங்கிப்பேட்டையில் சுமார் 30 சதவீதம் மீன் இறக்குமதி ஆகிறது. புதிதாக இங்கு மீன்பிடி இறங்குதளம் ஒன்று கட்டப்பட்டுள்ளது (படம் 14). சுமார் 102 பைபர் படகுகள் மற்றும் 60 இழுவை படகுகள் மீன்பிடிக்க இங்கே தினசரி இயக்கப்படுகின்றன. இங்கு மத்திமீன் அதிகமாக கிடைக்கிறது. இதனை தொடர்ந்து சூரை, பாறை மீன்ஈ கிழங்கான், கோலா, சுறா, இறால் மற்றும் நண்டு வகைகள் பெரும் பங்களிக்கின்றன. 2014-2015 சூரை மற்றும் கோலா மீன்கள் அதிக அளவில் கிடைத்தன. பரங்கிப்பேட்டை மீன்வளத்துறை மற்றும் கடல்வாழ் உயிரியல் உயராய்வு மைய ஆராய்ச்சி துறையும் மீனவர் மற்றும் மீனவர் பெண்களுக்கு நலம் கருதி உதவுகின்றனர். இங்கு கிடைக்கக்கூடிய மீன்கள் கேரளா, பெங்களூர் மாநிலங்களுக்கு விற்கப்படுகிறது. ஒரு நாள் ஒன்றுக்கு 30

லட்சம் முதல் 80 லட்சம் ரூபாய் மீன்கள் ஏற்றுமதி செய்யப்படக்கூடிய நேரமும் உண்டு. சில நாட்களில் வெறும் வளையுடன் கவலையுடன் வருவதும் உண்டு. இங்குள்ள மீன்வளம் பற்றி தனியாக ஒரு புத்தகமே எழுதலாம் (படம் 15).

## ILFS - **தர்மல் திட்டம்** (மின் உற்பத்தி)

**ILFS** தமிழ்நாடு மின் உற்பத்தி நிறுவனம் வரையறுக்கப்பட்ட அடிப்படையில் பரங்கிப்பேட்டை தொகுதி அனல் மின் நிலையம் **3600 மெகாவாட் மின்** உற்பத்தி நிலக்கரி உள்ளடக்கிய ஒரு திட்டமாகும். திட்ட ஆலைக்கு தேவையான மற்ற இயந்திரங்கள் சேர்த்து 25 லட்சம் டன் இறக்குமதி செய்யப்படுகிறது. உள்கட்டமைப்பு செயல்படுத்த ஒரு பிரத்யேக துறைமுக/படகுத்துறை கொண்டுள்ளது. இந்த திட்டத்திற்கு தேவையான நிலக்கரி இந்தோனேஷியாவில் உள்ள ஒரு சுரங்கத்திலிருந்து வாங்கப்படுகிறது. இந்த சுற்றுச்சூழல் மற்றும் அனைத்து முக்கிய ஒப்புதல் மத்திய சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவகால மாற்ற அமைச்சகத்திடமிருந்து இவை ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 20 கி.மீ. தூரத்தில் சிப்காட் நிறுவனம் அமைந்துள்ளது (படம் 17).

பரங்கிப்பேட்டை கடலோரப் பகுதிகளில் (கடலூர் SIPCOT) சுமார் 30 கி.மீ. வரை இருபதிற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் 10 க்கு மேற்பட்டவை மருந்து. இரசாயணம், பெயிண்ட் தயாரிக்கின்றனர். 2014 முதல் IFLS தமிழ்நாடு மின் உற்பத்தி செய்வதற்கு பலகோடி ரூபாய் முதலீட்டில் நடைபெற்று வருகிறது. வருங்காலத்தில், தொழிற்சாலை கழிவுகளால் கடல் மாசுபட வாய்ப்பு உள்ளது. சமுதாய

முன்னேற்றமும், இயற்கை பாதுகாப்பு இரண்டு கண்கள் போல காக்க வேண்டும்.

10-15 ஆண்டுகளுக்கு பிறகு இந்த பகுதியில் கடல்நீர் மற்றும் நிலத்தடி நீர் மாசுபடலாம். இதற்கு தொழில்மயமாக்கலும் ஒரு காரணம். மின் உற்பத்தியும், மீன் உற்பத்தியும் சிறக்க வேண்டும். இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பரங்கிப்பேட்டை நகரம் மற்றும் சுற்றியுள்ள சூழலை காப்பாற்ற முயற்சி செய்வோம். வரும் சந்ததியினருக்கு இந்த சரித்திரம், பாரம்பரியம் தெரிவது நல்லது. வரும் காலத்தில் சுற்றுலா தலமாக மாற்றி புதுச்சேரி, கடலூர், சிதம்பரம், பிச்சாவரம், பரங்கிப்பேட்டை என்று உலகநாடுகளிலிருந்து பல மக்கள் வருகைபுரியும் இடமாக வளர வாழ்த்துவோம்.

**மேற்கோள் நூல்கள்**


1. சேவாமந்திர் பொன்விழா ஆண்டுமலர், 2000. 60 பக்கம்.
2. பாபாஜி கிரியா டிரஸ்ட் வெளியீடுகள்.
3. உக்காஷ் டிரஸ்ட் தகவல் கையேடு.
4. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கடல்வாழ் உயிரியல் உயராய்வு மையம் பொன்விழா மலர், 2012. 175 பக்கம்.
5. இணையதளம் தகவல்கள்.

## வரலாறு ஒரு கண்ணோட்டம்

மகா அவதாரம் ஸ்ரீ பாபாஜி பிறந்த ஊர் - 203 A.D. (1800 வருடங்களுக்கு முன்பு)

↓

இராஜேந்திர சோழன் தனது கப்பற்படையை பரங்கிப்பேட்டையிலும் அதனை ஒற்றிய பிச்சாவரத்திலும் நிறுவியிருந்தார் (1200 வருடங்களுக்கு முன்பு)

↓

இராஜா கிருஷ்ணப்ப நாயக்கர் ஆறாம் நூற்றாண்டின்பொழுது கிருஷ்ணப்பட்டினம் என்று பெயரிட்டு மக்களுக்கு குடியிறுக்க வீடும், விவசாயம் செய்ய நிலமும் அவர் நிறுவியிருக்கிறார் (1100 வருடங்களுக்கு முன்பு)

↓

இரண்டாவது பாக்தாத் - என்ற சிறப்பு பெயர் உடையது. 360 தர்காக்களும், 11 மசூதிகளும் விளங்கப்பெற்றது (7ம் நூற்றாண்டு)

↓

முஹம்மதியர்கள் அரபு நாடுகளிலிருந்தும், மரைக்காயர் என்ற முஸ்லிம்களும் கடல் வாணிபம் செய்வதற்கு ஏற்ற இடமாக இந்த இடத்தை தேர்வு செய்து துறைமுகம் ஒன்றை நிறுவி, பரிமுக அம்பி, அரிமுக அம்பி என்ற இரண்டு கப்பல்களிளும் ஏற்றுமதி, இறக்குமதி செய்து வந்தார்கள்

↓

16 ஆம் நூற்றாண்டில் - 292 ஆண்டுகளுக்கு முன்பாக போர்ச்சிக்கிஸ், டச்சு, பிரிட்டிஷ் ஆகியோர் ஆண்டு வந்தனர். அந்த வருடங்களில் பக்கீங்காங் கால்வாய் கட்டப்பட்டது. இருப்பு தொழிற்சாலை, சாயச்தொழிற்காலை நிறுவப்பட்டது

↓

↓

பரங்கிப்பேட்டையிலிருந்து ஏற்றுமதி வேர்கடலையும், பருத்தியும், இரும்பும். இறக்குமதி பர்மாவிலிருந்து தேக்கும், இலங்கையிலிருந்து பாக்கும் செய்யப்பட்டது (16 ஆம் நூற்றாண்டு - 292 ஆண்டுகளுக்கு முன்பு)

↓

சேலத்திலிருந்து வெள்ளாறு வழியாக கொண்டு வந்து உருக்கி தரமான இரும்பு தண்டவாளங்களை செய்தனர். இன்றும் (Made in Portonovo) என்று சென்னை எழும்பூர் இரயில் நிலயத்திலும், லண்டன் இரும்பு பாலத்திலும் காணப்படுகிறது

↓

1781 - 235 ஆண்டுகளுக்கு முன்பு மைசூர் போர் ஹைதர்அலி அரசர்க்கும், பிரிட்டிஷ் தளபதி சர்அயர்கூட்டிற்கும் பல மாதங்கள் சண்டை நடந்தது. போரில் பிரிட்டிஷ் தலைவர் வென்றார்.

↓

100 ஆண்டுகளுக்கு முன்பாக சேவாமந்திர் என்ற கல்வி நிறுவனம் மேரி அன்னி பீட்டர் சன் என்ற பெண்மனி டென்மார்க்கிலிருந்து வந்து ஏழை பெண்கள் படிப்பதற்காக பள்ளியை நிறுவினார். அண்ணல் மகாத்மா காந்தி அடிகள் 1921- ல் இங்கு வந்திருந்து அடிக்கல் நாட்டியுள்ளார். அவரது நினைவாக அவரது காலணி இன்றும் இங்கு வைத்துள்ளனர்

↓

60 ஆண்டுகளுக்கு முன்பாக அண்ணாமலை பல்கலைக்கழகத்திலிருந்து பேராசிரியர் R.V. சேஷய்யா அவர்கள் கடல்வாழ் உயிரியல் உயராய்வு மையத்தை நிறுவினார். இன்று 620 முனைவர் பட்டம் பெறப்பட்டுள்ளது என்பது பெருமைக்குரியது

## படம் 1




பரங்கிப்பேட்டை - வங்கக்கடல் - வெள்ளாறு



இராஜேந்திரசோழன்



கிருஷ்ணதேவராயர்

## படம் 2




பாபாஜி கோயிலின் முன்பகுதி



மகாவதார் ஸ்ரீபாபாஜி



பேராசிரியர் யோகி ராமய்யா



பாபாஜி பிறந்த இடம்



சித்தர் முருகன் பாபாஜிக்கு காட்சி அளித்தது

## படம் 3



நுழைவாயில்



மசூதியின் முழு தோற்றம்



உக்காஸ் (தீப விளக்குடன்) அடக்கஸ்தலம்





தைக்கால் தோற்றம் (புதுசத்திரம் வழியில் உள்ளது)

## படம் 4








மீராபள்ளியின் தோற்றம்

## படம் 5



சிவன் கோயில்



குமரன் கோயில்




புத்துமாரியம்மன் கோயில்



செட்டிக் கோயில் (சிவன்)





மவுனகுரு (கடல்வாழ் உயராய்வு மைய வளாகத்திற்குள் உள்ளது)

## படம் 6



இரும்பு தொழிற்சாலை - வரைபடம்



தற்போதுள்ள இடம் - இரும்பு தொழிற்சாலை

## படம் 7








ஹைதர் அலி



சர் எயிர் கூட்



போரில் இறந்தவர்களின் சமாதி



போர் நினைவு கம்பம் (கடல் உயிரியல் உயராய்வு மைய வளாகத்திற்கு அருகில்)

## படம் 8



சேவாமந்திர் கட்டிடம்



அன்னி மேரி பீட்டர்சன் (பெரிய அம்மா)



மேரி சாக்கோ (சின்ன அம்மா)



சேவாமந்திரில் இருந்த பெரிய அக்கா





மகாத்மா காந்தியடிகளால் கொடுக்கப்பட்ட மிதியடி இப்பொழுதும் சேவாமந்திரில் உள்ளது

**படம் 9**



1955 ஆம் ஆண்டு இம்மையத்தில் இருந்த கட்டிடம்



1956 ஆம் ஆண்டு சிறிய துறையாக கடல் உயிரியல் உயராய்வு மையம் துவங்கப்பட்டது



R.V. சேஷய்யா - முதல் இயக்குநர்

## படம் 10



தற்போது உள்ள கடல் உயிரியல் உயராய்வு மையத்தின் முகப்பு தோற்றம்



நூலகம் மற்றும் கலையரங்கம்



ஆய்வுக்கூடம்



கலையரங்கத்தின் உட்புறத்தோற்றம்

## படம் 11



**நிறுவனர் R.V. சேஷய்யா, துணை நிறுவனரும் எனது ஆராய்ச்சி ஆசிரியருமான முனைவர் K. பாலசுப்பிரமணின் (வட்ட குறியீட்டில்)**









**முன்னாள் பேராசிரியர்கள்**

## படம் 12









பறவை கோலாமீன்



கடல் பாம்பு



அல்லா மீன்



திமிங்கிலத்தின் முதகெலும்பு

கடல்வாழ் உயிரியல் உயராய்வு மையத்தின் அருங்காட்சியகம்

## படம் 13



கடல் உயிரியல் உயராய்வு மையத்தின் எதிரில் உள்ள வெள்ளாறு மற்றும் மாங்ரூக்காடு



வெள்ளாற்றில் மீன்பிடிக்கும் மீனவர்கள்



வெள்ளாற்றில் கலக்கும் பக்கிம்காம் கால்வாய்

## படம் 14



மீன்பிடி துறைமுகம் - அள்ளி கொடுக்கும் கடல் அன்னை, அன்னங்கோயில்



புதிதாக கட்டப்பட்டுள்ள மீன் ஏலம் விடும் இடம்



தினசரி மீன் தொழில்



மீன்கள் கேரளாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது



மீன்பிடி தளம்



கலங்கரை விளக்கம்

## படம் 15









**அதிக அளவில் கிடைக்கும் மத்தி மற்றும் பறவை கோலா மீன்**

## படம் 16







இறால் வளர்ப்பு

## படம் 17






பிரபலமான ஹல்வா (அல்வா)



சுவையான பரங்கிப்பேட்டை பரோட்டா

## படம் 18



தமிழ் நாடு மீன்வளத்துறை



மத்திய சுங்கச்சாவடி



**ILFS – அனல்மின் நிலையம்**



வியாழன் தோறும் வாரச்சந்தை

## படம் 19



நாச்சியார் தர்கா



நாச்சியார் கல்லறை





உமறுபுலவர் சீராப்புராணம் இயற்றிய இடம்



பக்கர்மாலிமர் தர்கா



ஆளுனரின் கல்லறை

## படம் 20



வெள்ளாறு அருகில் - உப்பளமும் உண்டு, இறால் பண்ணையுடம் உண்டு




சித்த மருந்துகள்



பரங்கிப்பேட்டை பகோடா (காயின், மின்ட்)

## படம் 21







